# இந்திய அரசியலில் இந்து மதத்தின் செல்வாக்கு

**பிரசாத், சி**[*]

**ஆய்வுச் சுருக்கம்**

இந்தியாவானது பல்தேசிய இனங்களைக் கொண்ட நாடாகும். இங்கு பல்வேறு மதத்தவர்கள் வாழ்கின்றனர். இங்கு பெரும்பாண்மை இனமாக இந்துக்கள் காணப்படுவதுடன் முஸ்லிம், சீக்கிய, பௌத்த, கிறீஸ்தவ மதத்தவர்களும் காணப்படுகின்றனர். மதமானது இந்தியரது வாழ்க்கையில் மிக ஆழமாக வேரூன்றி உள்ளது. இந்தியாவின் அரசியலில் மதமானது நிலைத்த செல்வாக்கினைப் பெற்றிருந்தது. இந்திய அரசியல் வரலாற்று வளர்ச்சியில் மௌரியர் காலத்தினைத் தவிர குப்தர் காலத்துக்கு முற்பட்ட ஏனைய வம்சங்களின் ஆட்சிக் காலத்தில் தெய்வீக உரிமைக் கோட்பாடு பெருமளவுக்கு அரசியலில் பின்பற்றப்பட்டிருந்தது. இந்திய வரலாற்றில் மதமானது நிலைத்த செல்வாக்குடனும், அரசியலில் அதன் தீவிரத்தையும் நிலைநிறுத்தி வந்தது. சுதந்திரத்தை அடுத்து உருவாக்கிய அரசியல் திட்டமானது இந்திய ஒரு மதச்சார்பற்ற சமதர்ம குடியரசு என்பதை வலியுறுத்துகின்றது. இதன்படி மதச்சார்பற்ற தன்மையை கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறப்பட்டாலும் நடைமுறையில் மதச்சார்பற்ற தன்மை என்பது கேள்விக்குரிய ஒன்றாக மாறியுள்ளது. இந்தியாவின் கலாசார முக்கியத்துவமும், மக்கள் மத்தியில் உள்ள மத உணர்வுகளும், மதப் பெறுமானங்களும் அதிகம் காணப்படுவதுடன் அன்னியர் வருகை, மறுமலர்ச்சி, உயர்குழாம் செல்வாக்கு என்பன அரசியலில் மதத்தின் செல்வாக்கு உயர்வுபெற காரணமாக அமைந்தது. சுதந்திரத்துக்குப் பின்னர் பாரதிய ஜனதா கட்சி, ஆர்.எஸ்.எஸ், இந்து மகாசபை, சிவசேனை போன்றன இந்து மதத்தினை அரசியலில் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இதனால் தீவிர இந்து தத்துவமானது மதக் கலவரங்களைத் தோற்றுவித்ததோடு, ஏனைய மத உரிமைகளை புறக்கணிப்பதாகவும் அமைந்திருந்தது. மதமானது சமூகங்களுக்கிடையிலும், இனங்களுக்கிடையிலும் ஒற்றுமையினை ஏற்படுத்த வேண்டிய ஒன்று. இதனால் மதத்திலிருந்து அரசியல் விலகியிருப்பதோடு நடுநிலையோடு செயற்பட வேண்டியது இன்றியமையாததாகும். இந்த வகையில் இந்திய அரசியலில் இந்து மதத்தின் தனித்துவமான செல்வாக்கினையும், அதன் மூலம் ஏற்படும் சவால்களையும் ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது. இவ் ஆய்வானது வரலாற்று முறையியல், பகுப்பாய்வு முறையியல், விமர்சன முறையியல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, இவ்வாய்விற்கான தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

**பிரதான சொற்கள்:** இந்து மதம், இந்திய அரசியல், மதச் சார்பின்மை, மதவாதம், அரசியற் கட்சிகள்

To whom correspondence should be addressed: sripirasath_87@yahoo.com

[*]Visiting Lecturer, Open University of Sri Lanka.